**O.S. No.15/2024**

**07.08.2025**

**பி.சா.1**

**திரு பாண்டியராஜன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய எதிர் வழக்குரையில் எனக்கும் வாதிக்கும் வரவு-செலவு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. எதிர் வழக்குரையில் 2017 ல் ரூ.15,00,000/-மும் 2019 ல் ரூ.20,00,000/-மும் கடனாக வாங்கியிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. எந்த தேதி, மாதம்,வருடம் வாதிக்கு தொகையை திரும்ப செலுத்தினேன் என்றால் தேதி தெரியவில்லை, பாதி தொகை வங்கி கணக்கில் செலுத்தினேன். அதற்கான வங்கி கணக்கு விபரத்தை வங்கியிலிருந்து பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வாதி கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். அவர் கடன் கொடுக்கும் விபரம் எனக்கு நேரடியாக தெரியும். நான் வேறு யாருக்கும் வாதியிடமிருந்து தொகை கடனாக பெற்று கொடுக்கவில்லை. எந்த தேதியில் ரூ.7,50,000/-யை வாதி கேட்டார் என்றால் தேதி ஞாபகமில்லை. தொகை திரும்ப செலுத்தியபின் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு

அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை, நேரடியாக வாதியிடம் கேட்டேன். வாதி ஆவணம் எதையும் திரும்ப கொடுக்காததால் காவல் துறையில் புகார் கொடுத்தேன். காவல் துறையினர் இது சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றம் வழியாக பார்த்துக் கொள்ள சொன்னார்கள். என்னால் வாதிக்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் சட்ட செல்நிலை அற்றது என விளம்புகை செய்ய இந்த அசல் வழக்கில் மனு ஏதும் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. 30.05.2023 ல் ரூ.10,00,000/- ரொக்கமாக வாதியிடம் கடன் பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தேன் எனவும் ஒப்புக் கொண்டபடி தொகை திரும்ப செலுத்ததாதல் வாதியால் உரிய சட்ட வழிமுறைப்படி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்பதால்தான் அதை நான் மறுக்கவில்லை என்றால் சரி. அது ஏற்கனவே வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்டது. நான் Business செய்து கொண்டிருக்கிறேன். எனக்கு கூடுதலாக finance தொழில் செய்வதில்லை. வாதி நான் பைனான்ஸ் தொழில் செய்வதாகவும் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் எனவும் கூறுகிறார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் என் மனைவியிடமிருந்து எந்த பொறுப்புறுதி ஆவணமும் வாதியால் பெறப்படவில்லை

என்றால் தவறு. 30.05.2023 ல் வாதியிடமிருந்து பெறப்பட்ட ரூ.10,00,000/-தை திரும்ப கொடுக்காமல் காலதாமதப்படுத்த தொகை கொடுத்து விட்டதாகவும் கடனுறுதி சீட்டை தன்னிச்சையாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. நான் வாதியிடமிருந்து பெற்ற தொகையை திரும்ப செலுத்த கடமைபட்டவன் எனவும் வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டியது எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.07 14:38:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.